

சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் வைத்திலிங்கம் - குணாளன்

அவர்களின் பிரிவினை முன்னிட்டு வெளியிடப்படும்

ஞாபகார்த்த

# நினைவுமலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04-07-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# நினைவு மலர்



எமது குடும்ப தீபம்

## அமரர் வைத்திலிங்கம் குணாளன்

அவர்களின் அமரத்துவம் குறித்த

நினைவு மலர்


**04-07-2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அறிவினில் ஆற்றலில் சிறந்து
உள்ளத்தால் உயர்ந்து
பார் போற்ற வாழ்ந்து
நன் மகனாய்
நற் சகோதரனாய்
கண்ணிறைந்த கணவாய்
நற் தந்தையாய்
சிறந்த மருமகனாய்
நல்லறிவூட்டிய தந்தையாய்
அன்பு மாமனாய்
பாசத்திற்குரிய பேரனாய்
அன்பு மைத்துனராய்
பெருமைக்குரியவராய்
திகழ்ந்த எம் தெய்வத்தின்
பாதக் கமலங்களில் இம் மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# வைத்திலிங்கம் - குணாளன்

அன்னையின் மடியில்
15.08.1948

ஆண்டவன் அடியில்
04.06.2021

திதி நிர்ணய வெண்பா


ஆண்டு பிலவ வைகாசியிரு பத்திரண்டு வெள்ளி
பூண்ட திதி அபரட்ச நவமிதனில் யாண்டுபுகழ்
குணாளன் என்னும்நற் குணமுடையோன் உமையவள்தன்
மணாளன் பதம் சேர்ந்தான் மகிழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

**திருச்சிற்றம்பலம்**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாய்
தன்மையினால் கண்ணிற் பணிவின் கனிந்து.

**திருச்சிற்றம்பலம்**

# பஞ்சபுராணம்

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடலோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண் டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.


## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குரவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

***திருச்சிற்றம்பலம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வைத்திலிங்கம் - குணாளன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

வையகத்தில் அழகு மிகவையும் யாழ்ப்பாணத்தின் முத்துகளாகிய கிராமத்தின் வளம் மிக பொருந்தியும் வளவாளர்கள் சிறந்தும் வாழும் சிறப்பு மிகு வரியப்புலத்திலே திரு.திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக பிறந்தார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப்படும்"

எனும் வள்ளுவர் திருவாக்கிற்கு ஓர் உதாரண மகிந்தனாக வாழ்ந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியையும் தொடர்ந்து கா.பொ.த சாதாரண தரம் வரையில் யாழ் மல்லாகம் இந்துக் கல்லூரியிலே பயின்றார். அதனை தொடர்ந்து மேற்படிப்பினை கொழும்பிலே மேற்கொண்டார்.

இவரது சகோதரர்களான அமரர் ஜம்புகேஸ்வரன், வில்வராணி, அமரர் அம்பிகாவலன், ஞானேஸ்வரி (பிரான்ஸ்), ஞானச்சந்திரன், கிருபாகரன் (ஜேர்மனி) மைத்துனி, மைத்துனர்களாக முறையே திலகராணி, அமரர் சுந்தரலிங்கம், கௌரி, ஈஸ்வரானந்தன், சரஸ்வதிதேவி, நகுலேஸ்வரி எனும் பெரும் விருட்சத்தின் அங்கமாகத் திகழ்ந்தார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் தொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற வாக்கிற்கு இம்மியளவும் கருத்து மாறுபாடு இல்லாத பூமாதேவியை போன்று பொறுமை கொண்ட ஜெயந்தி அவர்களை அன்பு மனையாள் ஆகப் பெற்றார். இல்லறம் ஆகிய நல்லறச் சிறப்பாய் தமது வாழ்வின் வேராக கதீசன், நிருஷன் (போதனாசிரியர், *AP&H*) ஆகிய இரு ஆண் குழந்தைகளையும், சிவஉமா (2020 உயர்தர மாணவி – யாழ் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் கல்லூரி) எனும் பெண்குழந்தையையும் பெற்று நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்னும் இலக்கணத்திற்கு ஏற்ப தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். இவரின் மூத்த மகன் கதீசன் அவர்கள் சங்கீதா என்பவரை திருமணம் செய்து இவர்கள் பரம்பரையின் தவப்பேறாக கைலாயநாதன் அருளால் கிடைத்த கைலாஷ் ஐ தமது பரம்பரையின் அருந்தவப் பேரனாக அடைந்தார்.

"திரைகடல் சென்றும் திரவியம் தேடு"

என்ற ஆன்றோர் வாக்கிற்கு அமைய தனது இளமைக் காலத்திலே தொழில் நிமித்தமாக சிங்கப்பூர் சென்ற இவர் மூன்று வருடங்கள் தனது தொழிலை செவ்வனே செய்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி மீளவும் சவுதி அரேபியாவிற்கு சென்டறு குடும்பத்திற்கு உரமாக நின்றார்.

இவ் வையகத்திலே பிறந்து வாழும் உயிர்கள் யாவும் ஈற்றில் இறைவனடி சேர்வது நியதி என்ற வகையில் தனது இறுதிக் காலத்தில் இருதய வருத்தம் காரணமாக அன்பிற்கினிய அனைவரையும் பிரிந்து ஆனி மாதம் நான்காம் திகதி இரவு 8 மணியளவில் மகாமாரியின் பாதத்தில் சரணடைந்தார்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *மனைவி புலம்பல் .................*

அன்னையாய் தந்தையாய்
என்னை ஆதரித்து
குறையேதும் இல்லாமல்
அன்பாகப் பார்த்தீரே............
நாளை விடியும் நீங்கள்
நலம் பெறுவீர்கள் என்றிருந்தேன்
பொல்லாத நாளும் வந்ததுவோ
எனது நம்பிக்கையும் வீண் போனதுவோ
இத்தனை நாள் உனக்காக இறைவனிடம் கேட்டதெல்லாம்
அத்தனையும் வீணாக போனதுவோ
தனியாக தவிக்க விட்டு
நீங்கள் மட்டும் சென்றீரோ!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
என் வாழ்வு கதியற்று போனதுவோ
அலறித் துடிக்கின்றேன்
ஆறுதல் தருவது யார் இப்போ............
பொட்டு இழந்தேன் பூ இழந்தேன்
எங்களது பிள்ளைகளின்
சுகம் எதுவும் பாராமல்
என்னிடத்தே ஒப்படைத்து
நீங்கள் மட்டும் சென்றீரோ!
உங்களது நினைவலையில்
உறக்கமின்றி தவிக்கின்றேன்
உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சகோதரா நீ எங்கே?*

அன்பிற்கு இலக்கணமாய் ஒரு தாய் வயிற்றில்
ஒரு கொடியில் பூத்திருந்தோம்
சிறகடிக்கும் பறவைகளாய் நான்குபு திசைகளிலும்
தொப்புள் உறவுகள் பிறதேசமதில் பறந்திருந்தோம் சகோதரா..........

பூவாகி காயாகி கனியாகி
இருந்த உன்னை புயலொன்று
வந்து அடியோடு சாய்த்ததுவோ சகோதரா.......................

உடல் நோயால் நீ வருந்த
உளம் நொந்து நாம் துடித்தோம்
நோயின் வலி நீ பொறுத்தாய் சகோதரா.........................

காலன் அவன் உனை அழைக்கும்
நேரம் இதுவோ...............
இனிமேல் அழுவதற்கு எம் கண்ணில் நீரில்லை
அழுதாலும் துடைப்பதற்கு
நீ இங்கில்லை சகோதரா.......................

உடன் பிறப்புகள் யாவும் ஆங்காங்கே இருந்தாலும்
உன் இழப்பை தாங்க முடியாமல்
கதறுகிறோம் சகோதரா..............................

**- வாடும் உறவுகள் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *நினைக்கும் போதெல்லாம் கண்களில் ஈரம் கசியுது அப்பா!*

எம்மேல் பாசம் காட்டிய தந்தையே
        இன்று நீங்கள் எங்கே?
உங்களை நினைக்கும் போதெல்லாம்
        கண்ணீர் துளிகள் விழுகின்றனவே
எங்களை எல்லாம் தவிக்க விட்டு
        எங்கே நீங்கள் சென்றீர்கள்?
எங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தீரே
        எங்களை விட்டு பிரிந்ததேனோ
எம்மோடு எமக்காக வாழ்ந்தீரே
        இறுதிவரை எம்மோடு வாழாமல்
நடுவழியில் தவிக்க விட்டு சென்றதேனோ
        அப்பா என்று அழைத்திடவே
இனி யாரப்பா எமக்கு..............

நோயுற்று இருந்த காலத்திலும்
        எம்மைத்தானே நினைத்திருந்தீர்
இரவு பகல் பாராது
        எமக்காகப் பாடுபட்டு உழைத்தீரே
நீங்கள் செய்ய வேண்டும் என
        எண்ணியவற்றை எல்லாம்
இனி நாம் செய்ய எண்ணுகின்றோம்
        உங்கள் ஆசி என்றும் கிடைக்க வேண்டி
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மகன்**
**-கதீசன்**
**-நிருஷன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு முறை உமைக்காண ஒரு வரம் வருமா அப்பா.........!

செல்லப் பிள்ளையாய் என்னை
செதுக்கிய எனது அப்பாவே
பிள்ளை என்று அழைக்கும் குரல்
கேட்கிறது அப்பா....................
என் அப்பாவை தேடி தவிக்கிறேன்
நீங்கள் எங்கே போய் இருக்கிறீர்கள்
என்னிடம் வாருங்கள் அப்பா
எங்களைத் தேடி உன் செல்ல
மகள் அலைகின்றேன் அப்பா

அப்பா
நம் அன்பின் முகில்
நெஞ்சில் மழை தூறுகிறது
நீங்கள் வாழ்ந்த ஞாபகங்கள்
பூஞ்சோலைகளாக பூக்கின்றன
என் மனதில்!
என்னை பாசத்தால்
கட்டியாண்ட அப்பாவே
எமக்கு அறிவு தந்த
ஆசானாய் இருந்தீரப்பா
ஒரே ஒரு செல்ல மகள் நீ
என்றெல்லாம் சொல்வாயே
எத்தனையோ கோட்டைகள் கட்டியிருப்பாய்
என் செல்ல மகளுக்காய்
எவற்றையும் பாராமல்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
சென்று விட்டீரே
இனி ஒரு முறை உம்மைக் காணும்
ஒரு வரம் வருமா அப்பா!
உங்களது ஆசி என்றும் கிடைக்க வேண்டி ஆத்மா சாந்தி பெற
இறைதாள் இறைஞ்சி நிற்கின்றேன்.

**- உன் செல்ல மகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அருமை மாமாவே.................

பாசமுடன் எம்மை வளர்த்த
எம் அருமை மாமாவே........
அன்பு கொண்ட உங்கள் உயிர்
எம்மை விட்டு போனது மாமா!
ஆலமரம் சாய்ந்ததினால் விழுதுகள்
இங்கே வாடுது மாமா
இனிய உங்கள் அன்புக்குரல்
நிதமும் காதில் ஒலிக்குது மாமா
தனித்து எமை வாழ விட்டு - இன்று
நீங்கள் போனது நியாயமா மாமா
உறவுகள் எத்தனை இருந்தாலும்
தேடினாலும் காண்போமா உம்மை – மாமா
உரிமைக்கு ஓர் உறவாய் வந்த
எங்கள் மாமாவே
என்றும் உங்கள் நினைவு
எம்மை விட்டு அகலாது மாமா
நீங்கள் எம் வீட்டுக்கு
நடந்து வரும் பாதை வெளியாய் உள்ளது மாமா
அதை நிரப்ப எவராலும் முடியாது
இன்று உங்களை இழந்து தவிக்கின்றோம்
எம் அருமை மாமாவே..........................

**மருமக்கள் -**

**- சசிக்குமார், சஞ்சீவ்குமார், அரிகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *கண்ணீரில் கரைகிறேன்...............*

மருமகளாய் நினைக்காமல்

மகளாய் நினைத்து

நல்வழி காட்டி யெம்மை நலமுடனே

வாழ வைத்தீர்கள்

எல்லாம் நாடகமோ போகுமிடம்

சொல்லவில்லை

காலனவன் கவர்ந்ததினால் கதியுற்று

நிற்கின்றேன்.

வெந்து மாள்கின்றேன் வெந்துயர்

தீர்ப்பவர் யார்

**- மருமகள் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *தாத்தாவே வாருங்கள் .................*

காத்திருக்கின்றோம்
தாத்தா நீங்கள் எங்கு சென்றீர்கள்
சொல்லாமல் சென்று விட்டீர்களே.............
கல்வி தொடர பல புத்திமதிகள்
கூறினீங்களே...................
நம்முடன் சேர்ந்து பாடங்கள் பல
படிப்பீர்களே...........
எங்களுடன் சேர்ந்து பாடல்கள் பல
பாடினீர்களே .................
பகிடிக் கதைகள் பல கூறி எம்மைச் சிரிக்க
வைப்பீர்களே.............................
நித்தமும் எம் வீட்டில் வந்து உலாவித்
திரிவீர்களே..............
மழலைச் சொற்களால் உரையாடிச்
சிரிப்பீர்களே.......
எல்லாம் பொய்யாகிப் போனதுவே தாத்தா......
நீண்ட தூரம் சென்றது
சதியோ விதியோ
யாமறியோம்.......
நீங்கள் இன்றில்லையே என்பது
நம்பமுடியவில்லை தாத்தா..................

**- பேரப்பிள்ளைகள் -**
**- கைலாஷ்**
**- நிசானா**
**- சகானா**
**- மாருதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுகளுடன்.................

அன்பின் பிறப்பிடமாய்........
அமைதியின் அடைக்கலமாய்..................
பாசத்தின் ஜோதியாய்.........................
நேசத்தின் ஒளியாய்.....................
திகழ்ந்த எம் சித்தப்பா

நீங்கள் எங்களை விட்டு
நீண்டதூரம் சென்றாலும்
உங்கள் ஆசை முகம் எங்கள்
நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்களோடு வாழ்ந்த நாட்கள்
திரும்பி வராதா............. என்று
எண்ணித் துடிக்கின்றோம்.

நீங்கள் நடந்த பாதையெல்லாம்
எம் நினைவும் தொடர்கிறதே
பலமிழந்து பரிதவிக்கின்றோம்.
நித்தம் எங்களை நினைத்து
இறைவனிடம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகிறோம்!!!

**உங்கள் நீங்கா நினைவுடன்**
**கோமதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அன்புள்ள சித்தப்பா!*

கண்ணில் நீர் கசிகிறதே
உணர்வால் உள்ளத்தால்
வார்த்தைகளால் சொல்ல
முடியாத
வலியப்பா உங்கள் இழப்பு!

அளவில்லா அன்பையும்
மறக்க முடியாத பாசத்தையும்
அள்ளி கொடுத்து விட்டு
எங்கு தான் சென்றீர்கள்
சித்தப்பா

உங்கள் அன்பு முகம்
மறைந்தாலும்
எந்நாளும் எம் மனதில்
உங்கள் நினைவலைகள்
உயிர் வாழும் சித்தப்பா
அன்பு ஒன்றே கொடுத்து
சிரித்த முகமாய்
ஒரு உருவத்தில் பல உறவாய்
உதவும் மனப்பாங்குடன்
உதவிக்கரம் நீட்டும்
பண்பு உம்முள்ளே இருக்க
உலகம் போற்ற
உத்தமனாய் வாழ்ந்த
காலங்கள் போதும்
என நினைத்தீரோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள நீங்கள் எங்களை
பரிதவிக்க விட்டுச் சென்றது
ஏனோ!!!
கதறி அழுகிறோம், கலங்கித்
துடிக்கின்றோம்
கண் காணாமல் மறைந்து
விட்டீர்களே?
ஒருமுறை என்னை
கூப்பிடுங்கோ சித்தப்பா
தம்பா என்று

உங்கள் நினைவுகளுடனும்
நித்தமும் நினைத்து
வாழ்ந்திடுவோம்

மண்ணிலிருந்து நீங்கள்
மறைந்தாலும்
எங்கள் நினைவில் என்றும்
நீங்காது
எங்கள் அன்புத் தெய்வம்
மறைந்ததேனோ?
சித்தப்பா

*I Miss You*

**உங்கள் அன்பு மகள்**
**தம்பா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *கண்ணீர்க் காணிக்கை.....*

அன்பிலும் பண்பிலும் ஆழமாய் எங்கள் நெஞ்சில்
நிறைந்த ஆசை சித்தப்பாவே
மண்விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச்
சென்றாலும் கண்விட்டு மறையாமல் பலகாலம்
இருப்பீர்கள்

உருவத்தால் மிடுக்குடன்
உள்ளத்தால் உயர்ந்து
ஊரார் போற்ற வாழ்ந்தவரே
பொறுமையின் பெருந்தகையே.

எங்கள் அம்மாவிற்கு உடன்பிறவா சகோதரராய் இருந்தீர்களே
எங்களையும் உங்கள் பிள்ளைகள் போல் அன்பாகவும், பண்பாகவும்,
பாசமாகவும் வளர்த்தீர்களே!
எல்லையற்ற பாசத்தால் கட்டிப்போட்ட ஜெயந்தி
அன்ரியுடன் இணைந்து எங்களை கரையேற்றுவதில்
பெரும்பாடுபட்டீர்களே!
எங்களுக்கு துன்பம் வரும் போதெல்லாம் எங்கள்
கூடநின்று எங்களைக் கலங்கவிடாமல் எங்களுக்கு
ஆறுதல் வார்த்தைகளைக் கூறுவீர்களே சித்தப்பா
கடைசிகாலத்தில் அப்பாவுக்கு நண்பனாகவும்
அம்மாவுக்கு சகோதரனாயும் பெரும் உறுதுணையாகவும்
உதவியாகவும் இருந்தீர்கள். எங்களது அம்மாவின் மீது அதிக பாசம்
கொண்டிருந்தீர்கள். அவரது பிரிவால் மனமுடைந்த நிலையில்
அவரது
பத்தாவது மாசியத் திதியில் இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள்.
இப்பொழுது அப்பா உங்கள் இருவரையும் இழந்து
பட்டமரம் போல் நிற்கிறார்.
எங்கள் மனதைவிட்டு நீங்கள் மறையவில்லை மீளாத்துயில் கொண்டு
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
ஆண்டவன் அழைப்பை யார் தான் தடுப்பது?
ஆன்மா இளைப்பாறட்டும் கதிரமமலைச் சிவன் திருவடியில்

**சிவகௌரி,**

**ஞானகௌரி,**

**ரவிகுமார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரமக்கள் புலம்பல்..............

வாழ்க்கை என்பது
இவ்வாறு தான் இருக்கும் என
நிய வாழ்வில் வாழ்ந்து காட்டி
தன் நலம் பாராது வாழ்ந்தீரே
எம்மையும் உம் பிள்ளைகள் போல்
அப்புடன் பாசம் காட்டி அரவணைத்தீரே

உற்றார் உறவினர்களுடன்
இனிதே வாழ்ந்து
எவ்வேளை என்றாலும்
நமக்கெல்லாம் உறுதுணையாக
இருந்துவிட்டு
காலன் அவன் உனை
அழைக்கும் நேரம் இதுவோ
திடீரென நம்மை பிரிந்து
சென்று விட்டீரே
நம்பமுடியாமல் துயரால்
வாடுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

முத்தமிழ்க்குருமணி, கிரியாக்கிரமஜோதி
வாகீசவாரிதி, சகலாகமசங்கிரகர்,
"சிவாகம கலாநிதி"
**சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.
TP : 0094777311444

Muththamil Kurumani, Kiriyakramajothi,
Vakeesa Vaarithi, Sakalakama Sangrakar
"Sivagama Kalanithi"
**SIVASRI N. SARVESVARAKURUKKAL**
Sri Kathiramalai Sivan Thevasthanam,
Chunnakam.
E-mail : sarvagi@hotmail.co.uk


## அமைதியான சேவையாளன்

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தின் பிரதான பரிபாலகர்களில் அமரர் வைத்திலிங்கம் சேவையாளன், அவரது மனைவி தொடர்ந்தும் குடும்பத்தினர்களும் ஆவார். அமரர் சேவையாளன் அவர்கள் அமைதியும் நற்பண்புகளும் நிறைந்தவர். சிவன் மீதும், அம்மைமீதும் மிகுந்த பற்றுக் கொண்டவர், தன்னுடைய குடும்பத்தினரை ஒரு கட்டுக்கோப்புடன் அரவணைத்து பாதுகாத்து வளர்த்தவர். அவரது மறைவு அனைவருக்கும் பேரிழப்பாகும், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைய இறை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

## சிவபுராணம்



திருசிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் என்கோன்
திருவாசகம் என்னும் தேன்

**1. சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கொளியாய்,
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் மொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனார் அமுதே சிவபுரானே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு டம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தசஷ்டி கவசம்

**(திருச்சீரலைவாய் – திருச்செந்தூர்)**



## குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசம் துணை

## காப்பு

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனம் செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலாய் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகணபவச ரரரர ரரர
ரிகண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென்
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசங்குசமும்
பரந்த விழிகள் பன்னிர ண்டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தினமாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந்தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொக மொக மொகமொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடு டுடுடு டுடு
டகு டகு டிகு டிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்றும்
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலைவைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங்கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம் பெறக்காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடையழகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில் வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரலடியினை அருள் வேல் காக்க
கை களிரண்டும் கருணை வேல் காக்க
முன் கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனை வேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராக்க தரும்
அடியனைக் கண்டால் அலறிக கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிரும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனையடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால் கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுழுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்தரணை பருஅரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக்கு அருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாக
உன்னைத் துதித்த உன்திருநாமம்
சரவணபவனே சைலொளிபவனே
திரிபுரபவனே திகழொளிபவனே
பரிபுரபவனே பவமொழிபவனே
அரிதிருமுருகா அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடும் சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாள் பாலகுமரா
ஆவினன் குடிவாள் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன்
பூதியை நேசமுடன் யான்
நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள் செய்
கந்தசஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவதுமாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
முப்பத்தாறுரு கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயலதருள்வர்
மாற்றலாரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத்தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாக
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகள் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!
சரணம்! சரணம்! சரவணபவஓம்!
சரணம்! சரணம்! சண்முகா! சரணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் நாமாவளி

வா வா வா வா முருகையா வடிவேல் அழகா முருகையா
வா வா வா வா முருகையா வடிவேல் அழகா முருகையா
அண்ணாமலையாய் முருகையா அனுதினம் போற்ற அருளையா
ஆவினன் குடிவாழ் முருகையா ஆறுதல் தருவாய் முருகையா

கந்த கோட்டத்துக் கந்தையா களிப்புடன் வாழ அருளையா
கதிர்கா மத்துறை கந்தையா கழலடி வாழ்த்த அருளையா
திருத்தணி வளரும் முருகையா தினமும் வாழ அருளையா
திருச்செந்தூர் வேல் முருகையா திருவருள் புரிவாய் முருகையா

சரவண பவனே ஷண்முகனே சரணடைந்தோம் வள்ளி நாயகனே
சரவண பவனே ஷண்முகனே சரணடைந்தோம் வள்ளி நாயகனே
சரணம் சரணம் கந்தையா சண்முக பதயே கந்தையா
நல்லூர் வளரும் கந்தையா – நாங்கள்
நலமுடன் வாழ அருளையா

### பதினெட்டு சித்திகள்

1. அணிமா
2. லகிமா
3. ஈசக்த்துவம்
4. வசித்துவம்
5. ப்ராகாமியம்
6. புத்தி
7. இச்சா
8. மஹிமா
9. ப்ராப்தி
10. ஸர்வகாம
11. சர்வ சம்பதப்ரத
12. சர்வ ப்ரியம்கா
13. சர்வமங்களகாரண
14. ஸர்வதுக்குவிமோசன
15. ஸர்வம்-ருத்யுப்ரசமன
16. சர்வ விக்கிண நிவாரண
17. சர்வாங்சந்திர
18. சர்வ சௌபாக்கிய தாயக எனப் பதினெட்டு சித்திகளாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரி காப்பு

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
எண்ணின் றருள்செய் எலிவாகனப் பிள்ளையாய்
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றமும் வாராமற் கா.

### வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பை அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப்பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச்செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போற் கனன்றிடுவேன்
தீமைச்செயலெதுவும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசைவோடு விரதமிரு
தீமைச்செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்பு கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம்
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸீரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
குாமதஹும் கருணகாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

ஸர்வ ஸீகந்தி ஸீலபித லிங்கம்
புத்தி விவர்த்த காரண லிங்கம்
ஸித்ந் ஸீரா ஸீரவ ந்தித லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

கனக மஹாமணி பூசித லிங்கம்
பணி பதி வேஷ்டித சோபித லிங்கம்
தகூ ஸீயக்ஞ விநாநன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸீசோபித லிங்கம்
ஸஞ்சித பரப விநாசன லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபி ரேவச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

அஷ்ட தளேதபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்

ஸீரகுரு ஸீரவர பூஜித லிங்கம்
ஸீரவன புஸ்ப ஸதாரர்ச்சிவ லிங்கம்
புராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரண்மாமி ஸதாவித லிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போ(தும்) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போற்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.
சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லவை சில

சந்திப்புக்கள் தற்செயலானவை
பிரிவுகள் தவிர்க்க முடியாதவை

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை
வேர் அற்ற மரம் போல் ஆகும்.

அபிப்பிராயம் கொடுப்பதை விட
அபிப்பிராயம் கேட்பது மேல்

உண்டு நீ நீதிபதியாய் இரு
உண்மையில் நீ மகிழ்ச்சியாய் இருப்பாய்.

செல்வமும் புகழும் கடல் நீரைப் போன்றது
அதைக் குடிக்கக் குடிக்க தாகம் அதிகமாகும்.

உழைப்பு உடலைப் பலப்படுத்தும்
கஸ்டங்கள் மனதை பலப்படுத்தும்

வாய்ப்புக் கிடைக்கும் போதே நன்மை செய்
நீ நினைக்கும் போது வாய்ப்பு கிடைக்காது

பணிவு இல்லையேல் மனிதகுலம் இருக்க முடியாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா பற்றி சுருக்கமான அடிப்படை பொது அறிவு வினா விடைகள்

1) Covid – 19 என்றால் என்ன?

Corona virus Disease 2019 என்பதன் சுருக்கமே Covid 19 ஆகும்.

2) Covid – 19 கொரோனா வைரஸ் பாதிப்பு எந்த நாட்டில் முதன்முதலில் உருவானது?

சீனா

3) Covid – 19 கொரோனா வைரஸ் பாதிப்பு எப்போது ஏற்பட்டது?

2019 ஆம் ஆண்டு நவம்பரில் கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டது.

4) Covid – 19 கொரோனா வைரஸ் சீனாவின் எந்த நகரில் முதலில் தாக்கியது?

வுகான் நகரில்

5) வுகான் என்பது எந்த மாகாணத்தின் நகரம்?

ஹுபே

6) கொரோனா வைரஸ் நமது உடலில் என்ன செய்யும்?

கொரோனா வைரஸ் நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனமடையச் செய்கிறது

7) கொரோனா வைரஸ் நமக்கு வந்து விட்டால் எப்போது தெரியவரும்?

கொரோனா வைரஸ் நமது உடலில் தொற்றிக் கொண்டால் 2 முதல் 14 நாட்களில் அதன் அறிகுறிகள் தெரிந்து விடும்.

8) கொரோனா வைரஸ் தாக்குதலின் முக்கிய அறிகுறிகள் என்ன?

வறட்டு இருமல், தும்மல், மாரடைப்பு, தொண்டை எரிச்சல்

9) இந்தியாவில் Covid 19 பாதிப்பு எந்த மாநிலத்தில் முதலில் கண்டறியப்பட்டது?

கேரளா

10) உலகில் முதன் முதலில் கொரோனா வைரஸ் எப்போது கண்டறியப்பட்டது?

1937 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

1. எவராவது தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்

**ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்**

2. பெருஞ் சாதனை செய்வதற்கு மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். அவை :- ஏளனம், எதிர்ப்பு, அங்கீகாரம் ஆகியவை.

**சுவாமி விவேகானந்தர்**

3. நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.

**அப்துல் கலாம்**

4. ஒருமுறை வந்தால் கனவு, இரு முறை வந்தால் அது ஆசை, பலமுறை வந்தால் அது இலட்சியம்.

**அப்துல் கலாம்**

5. ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமனான எதிர்வினை உண்டு.

**ஐசாக் நியூட்டன்**

6. உலகம் உன்னை அறிவதை விட உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்

**அப்துல் கலாம்**

7. முடியாத விடயங்களைக் குறித்து கனவு காண்பவர்களே அவற்றை வெற்றி காண முடியும்

**அப்துல் கலாம்**

8. செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான். செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.

**பெர்னாட்ஷா**

9. கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றங்களை உணராதவனே குருடன்

**மகாத்மா காந்தி**

10. உலக வரலாற்றைப் படிப்பதை விட உலகத்தில் வரலாற்றை படைப்பதே இனிமை.

**ஜவகல்லால் நேரு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

○ வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் -
அதை நழுவ விடக் கூடாது
○ வாழ்க்கை ஒரு பயணம் -
அதைச் சென்று முடியுங்கள்
○ வாழ்க்கை ஒரு விடுகதை –
அதை விடுவியுங்கள்
○ வாழ்க்கை ஒரு விளையாட்டு –
அதில் ஈடுபடுங்கள்
○ வாழ்க்கை ஒரு பெறுமதி –
அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
○ வாழ்க்கை ஒரு போட்டி –
அதில் வெற்றி பெறுங்கள்
○ வாழ்க்கை ஒரு சோகம் -
அதற்கு தீர்வு காணுங்கள்
○ வாழ்க்கை ஒரு போராட்டம் -
அதை வென்று காட்டுங்கள்
○ வாழ்க்கை ஒரு வேதனை –
அதைத் தாங்கிக் கொள்ளுங்கள்
○ வாழ்க்கை ஒரு சவால் -
அதை எதிர் நோக்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *எங்கள் இதயம் கனிந்த நன்றி*

அன்பும் பண்பும் மாண்பும் நிறைந்த எம்மையெல்லாம் நெறிப்படுத்தி வாழ வைத்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த

எம் அன்புத் தெய்வம்

வைத்திலிங்கம் குணாளன்

அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடன் வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி வேண்டிய உதவிகள் செய்த உற்றர் உறவினர் நண்பர்கள் அயலவர்களிகளிற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி வாயிலாக ஆறுதல் தெரிவித்தவர்களிக்கும் மலர் வளையம் வைத்தும்கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியீட்டு அஞ்சலி செலுத்தியவர்களிற்கும் இறுதி சடங்கிலும் இறுதி ஊர் வலத்தில் கலந்து கொண்டவர்களிற்கும் மற்றும் பல வழிகளிலும் வேண்டிய உதவியை நல்கிய அனைவரிற்கும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டவர்களிற்கும் மற்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவரிற்கும் இம் மலரை அழகான முறையில் அச்சிட்டு உதவிய சந்நிதியான் பிறின்டேஸ் ஸ்தாபனத்திற்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியை தெரித்து கொள்கின்றோம்

நன்றி

**“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது”**

**வரியப்புலம்** | **இங்ஙனம்,**


**சுன்னாகம்.** | **குடும்பத்தினர்.**

**04.07.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org